**IN THE COURT OF THE ADDITIONAL SUBORDINATE JUDGE'S, HOSUR.**

O.S. 13/2009 தேதி 01.07.2025

பி.சா. 1 – முனிரெட்டி

**பி.சா. 1 திரும்ப அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு 6 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி :-**

6. எனக்கும் என் தம்பிக்கும் ஆரம்பத்தில் இருந்தே நல்ல உறவு முறை இல்லை என்று சொன்னால் ,சரிதான். என் தம்பி என் பெற்றோர்களுக்கு எதிராக செயல்பட்டதால் நல்ல உறவு முறை இல்லை என்கிறார். என் அப்பா இருக்கும் போதே வாய்மொழியாக பாகம் நடந்ததாக நான் சொல்லியுள்ளது பொய் என்று சொன்னால் சரியல்ல. அ அட்டவணை சொத்து வாதிக்கும் , 2 ம் பிரதிவாதிக்கும் வாய்மொழி பாகத்தில் ஒதுக்கப்பட்டதாக நான் சொல்லியுள்ளது பொய் என்று சொன்னால் சரியல்ல. ஆ அட்டவணை சொத்து என் பாகத்திற்கு ஒதுக்கப்பட்டதாக நான் சொல்லியுள்ளதும் பொய் என்று சொன்னால் சரியல்ல. ஆ அட்டவணை சொத்தை நான் சுய சம்பாதியத்தில் வாங்கியதாக சொல்வது தவறு என்று சொன்னால் சரியல்ல. வாதி எனக்கு பொது அதிகார ஆவணம் எதுவும் எழுதி கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. மேற்படி பொது அதிகார ஆவணத்தின் அசல் 2 ம் பிரதிவாதியின் கைவசம் இருப்பதாக நான் என்னுடைய நிருபண வாக்குமூலத்திலோ , எதிர் வழக்குரையிலோ சொல்லவில்லை என்றால் சரியல்ல. அவரிடம் இருப்பதாக தான் சொல்லியுள்ளேன் என்கிறார்.

7. என் தகப்பனார் எழுதி கொடுத்ததாக நான் சொல்லும் உயில் ஆவணம் மோசடியானது என்று சொன்னால் சரியல்ல. பி.சா.ஆ 18 பதிவு செய்யப்பட்ட பாகப்பத்திரம் 2 ம் பிரதிவாதியாலும் என்னாலும் தயார் செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. பி.சா.ஆ 18 பாகப்பத்திரத்தில் ஆ அட்டவணை சொத்து என் தகப்பனாருக்கு பாத்தியப்பட்டது என்று எழுதப்பட்டுள்ளது என்றால் நான் அரசாங்கத்திடம் இருந்து சொத்து வாங்குவதற்கு அனுமதி வாங்கவில்லை என்பதால் என் தகப்பனார் பெயரில் சொத்து பதிவு செய்யப்பட்டது என்கிறார், பி.சா.ஆ 18 ல் இந்து கூட்டுக்குடும்ப சொத்து என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் அந்த சொத்து நான் தனிப்பட்ட முறையில் கிரயம் வாங்கிய கிரய சொத்து என்கிறார்.

8. 6 ம் பிரதிவாதிக்கு ஆ அட்டவணை சொத்தை பொறுத்து நான் குத்தகை ஆவணம் எழுதி கொடுத்துள்ளேன் என்று சொன்னால் சரிதான். அந்த குத்தகை ஆவணத்திலும் ஆ அட்டவணை சொத்து என் தகப்பனாருக்கு பாத்தியப்பட்டதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆவணங்கள் என் தகப்பனார் பெயரில் இருந்ததால் அவ்வாறு எழுதப்பட்டது என்கிறார். நான் தாக்கல் செய்த எதிர் வழக்குரையில் என் தகப்பனாருக்கு என் மனைவி பொது அதிகார முகவராக இருந்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். பொது அதிகார முகவர் என்ற முறையில் என் தகப்பனாரின் வங்கி கணக்குகளையும் என் மனைவி தான் பராமரித்து வந்தார். என் தகப்பனார் பெயரில் பெங்களூருவில் உள்ள கெங்கசந்தா என்ற ஊரில் 75 செண்ட் இருந்தது என்றால் சரிதான். தற்போது அந்த சொத்து என் பெயருக்கு வந்துவிட்டது என்று சாட்சி சொல்கிறார். அந்த சொத்து எப்படி எனக்கு பாத்தியப்பட்டது என்று எதிர் வழக்குரையில் நான் சொல்லவில்லை என்றால் சரிதான். அந்த சொத்திற்காக பெங்களூரு நீதிமன்றத்தில் வழக்கு நடைபெற்று வருகிறது என்றால் சரிதான்.

9. அந்த வழக்கில் இரு தரப்பு சாட்சியமும் முடிவுறும் தருவாயில் உள்ளது என்றால் சரிதான். 2 ம் பிரதிவாதி பெங்களூருவில் என்னுடைய வீட்டில் இருந்தாரா என்றால் 1995 வரை இருந்தார். என் தகப்பனார் பெயரில் இருந்த கிரய பத்திரத்தில் நான் கிரயத் தொகை செலுத்தியதாக குறிப்பிடபடவில்லை என்றால் சரிதான் ஆனால் நான் தான் கிரயத் தொகை கொடுத்தேன் என்கிறார். ஆ அட்டவணை சொத்தை நானும் , என் மனைவியும் , மாமனார் குடும்பத்தாரும் சேர்ந்து என் தகப்பனார் பெயரில் வாங்கியதாக சொல்வது தவறு என்று சொன்னால் சரியல்ல. அ அட்டவணை சொத்தில் இருந்து வந்த வருமானத்தை கொண்டு தான் என் தகப்பனார் ஆ அட்டவணை சொத்தை கிரயம் வாங்கினார் என்று சொன்னால் சரியல்ல. அ அட்டவணை சொத்தில் வருமானம் எதுவும் வரவில்லை என்று சாட்சி சொல்கிறார். 3 முதல் 5 பிரதிவாதிகள் முதலில் ஒரு எதிர் வழக்குரை தாக்கல் செய்தார்கள் என்றும் , அதில் வாய்மொழிப்பாகம் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது என்றும், சொன்னால் சரிதான். அதன் பின்னிட்டு வேறொரு வழக்கறிஞர் மூலமாக தாக்கல் செய்த எதிர் வழக்குரையில் முதலில் தாக்கல் செய்த எதிர்வழக்குரைக்கு முற்றிலும் முரண்பட்டு எதிர் வழக்குரை தாக்கல் செய்யப்பட்டது என்றும் , அது நீதிமன்றத்தால் ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்றும் சொன்னால்

சரிதான். அ அட்டவணை சொத்து முழுவதும் தற்போது வாதியின் அனுபவத்தில் உள்ளது என்று சொன்னால் சரிதான்.

10. இவ்வழக்கு தாக்கல் செய்யும் பொருட்டு பல்வேறு ஆவணங்களை நான் உற்பத்தி செய்து தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. நானும் என் மனைவியும் என் தகப்பனார் பெயரில் சட்டப்படி செல்லாது என்று சொன்னால் சரியல்ல. நான் இவ்வழக்கில் சொல்லியுள்ள வாய்மொழிப்பாகம் , என் தகப்பனார் எழுதி கொடுத்ததாக சொல்லும் உயில் ஆவணம் , நானும் , 2 ம் பிரதிவாதியும் ஏற்படுத்திய பாகப்பிரிவினை ஆவணம் ஆகிய அனைத்தும் பொய் என்றும் சொன்னால் சரியல்ல. பொது அதிகார ஆவணம் எந்த தேதியில், எந்த நேரத்தில், யாரால் எழுதப்பட்டது என்றால் அந்த விவரம் வாதிக்கும் , 2 ம் பிரதிவாதிக்கும் தான் தெரியும் என்கிறார். பி.சா.ஆ 18 யாரால் , எப்போது எழுதப்பட்டது என்றால் ஆவண எழுத்தரால் 2005 ல் எழுதப்பட்டது. ஆ அட்டவணை சொத்துக்கு அருகில் என் மனைவி மற்றும் மகள்கள் பெயரில் சுமார் 10 , 15 ஏக்கர் சொத்து கிரயம் வாங்கியுள்ளேன் என்றால் சரிதான். அ , ஆ அட்டவணை சொத்துக்கள், என் தகப்பனாருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்றும், அவற்றில் அவரது வாரிசுகள் அனைத்திற்கும் பங்கு உள்ளது என்று சொன்னால் சரியல்ல.

மறுவிசாரணை : இல்லை

Taken down by me in Open Court and interpreted and read over to the Witness and acknowledged by him/her to be correct.

Additional Subordinate Judge,
Hosur